# வானவில்

VAANAVIL
ISSUE – 10 OCTOBER 2011

இதழ் - 10 ஐப்பசி 2011


# காணிப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு அவசியம்!



இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணி சம்பந்தமான பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கியுள்ளன. இந்தப் பிரச்சினையைப் பாவித்து குளிர்காய்வதற்கு வழக்கம் போல சில அரசியல் சக்திகளும் கச்சை கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியுள்ளன. குறிப்பாக 'வெறும் வாயை மென்றவனுக்கு அவல் கிடைத்தது போல', தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பிரச்சினையை வைத்து வானத்துக்கும் பூமிக்கும் துள்ளிக் குதிக்கிறது. இந்தப் பிரச்சினையை வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வேறு சில தமிழ் கட்சிகளும் வவுனியாவில் உண்ணாவிரத நாடகமொன்றையும் அரங்கேற்றியுள்ளன்.

அடுத்த வருட முற்பகுதியில் வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படும் என அரச தரப்பிலிருந்து அறிவித்தல் வெளியாகியுள்ளதால், அதை மனதில் வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பிரச்சினையில் தொடர்ந்தும் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கும் என்பது நிச்சயம். தமிழ்க் கூட்டமைப்பு நடாத்தும் இந்த நாடகம் பார்த்து இரசிப்பதற்கு இரசனையாகத்தான் இருக்கும். ஆனால் அதனால் இறுதியில் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை வரலாற்றை நன்கறிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். ஓர் எடுத்துக்காட்டாக திரிகோணமலை மாவட்டத்தின் இன்றைய நிலையைக் குறிப்பிடலாம்.

திரிகோணமலை தமிழர்களின் பாரம்பரியப் பூமி, அதைச் சிங்களவர்கள் ஆக்கிரமிக்கிறார்கள், எனவே வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு என்று தனியரசு அமைக்கப்படும் போது, திரிகோணமலைதான் அதன் தலைநகராக இருக்கும் என தமிழரசுக்கட்சி ஜம்பமடித்து வந்தது. அதுவே சிங்களப் பேரினவாதிகளை உசுப்பிவிட்ட, அவர்கள் படிப்படியாக அந்த மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு, சேருவில என்ற புதிய தேர்தல் தொகுதியொன்றையும் உருவாக்கி, அங்கு முன்னர் இருந்த இன விகிதாசாரத்தையும் மாற்றியமைத்துவிட்டாகள்.

இப்படிச் சொல்வதால் தமிழ் மக்களுக்கு காணி சம்பந்தமான பிரச்சினைகள் எதுவும் இல்லையென்பது அதன் அர்த்தமல்ல. கடந்த 60 ஆண்டுகளாக தமிழ் தலைமைகள் தொடர்ச்சியாகப் பின்பற்றி வரும் மலட்டுத்தனமான, வங்குரோத்தத்தனமான கொள்கைகளைச் சுட்டிக்காட்டவே, அதை இங்கு குறிப்பிட வேண்டி வந்தது.

ஒரு தேசிய இனத்தின் இருப்புக்கும் வாழ்வுக்கும் நிலம் என்பது அச்சாணியாகும். இலங்கைத் தமிழர்களுக்கும் அது பொருந்தும். இலங்கையில் தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# யாழ் பல்கலைக்கழகத்தை ஆக்கிரமிக்கும் தீயசக்திகள்

வானவில்

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், சுப்பிரமணியம் தவபாலசிங்கம் 16.10.2011 அன்று யாழ் கந்தர்மடம் – பழம் வீதி சந்திக்கு அருகாமையில் வைத்து தாக்கப்பட்டுள்ளார். தாக்குதல் மேற்கொண்டவர்கள் 'தனிநாடு தேவையா' எனக்கேட்டு தன்னை தாக்கியதாகவும், சிங்களத்திலும் தமிழிலும் உரையாடியதாகவும் அவர் கூறியுள்ளார். பழம் வீதியிலுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் (இந்த முன்னணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரை உள்ளடக்கிய கட்சி) உப அலுவலகத்திற்கு சென்றுவிட்டு திரும்பும்போதே இவர் தாக்கப்பட்டுள்ளார். தாக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவரை, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உபதலைவரும் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது வாகனத்தில் ஏற்றிச்சென்று யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவத்தை இலங்கையிலுள்ள சகல தமிழ்க்கட்சிகளும் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளன. இத்தாக்குதலை இராணுவ புலனாய்வுத்துறையினரே மேற்கொண்டதாக பொன்னம்பலம் கஜேந்திரகுமார் பிபிசியின் சிங்கள சேவைக்கு தெரிவுத்துள்ளார். 2009 ஆண்டு மேமாதம் புலிகள் முள்ளிவாய்க்காலில் வைத்து முழுமையாக தோற்கடிக்கப்பட்ட பின்னர், யாழ் குடாநாட்டில் அவ்வப்போது நிகழும் இவ்வாறான தாக்குதல் சம்பவங்களுக்கு இலங்கை அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு படையினரே பொறுப்புக் கூறவேண்டும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால் ஒருபுறத்தில் வன்னியில் கைது செய்யப்பட்ட பல ஆயிரக்கணக்கான புலிகளுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யும் இலங்கை அரசாங்கம், தீவிர தமிழ் தேசியவாதம் மற்றும் அரச எதிர்ப்புணர்வு கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற அமைப்புகளுடன் உறவு வைப்பவர்களுக்கு இவ்வாறாக இனந்தெரியாத நபர் பாணியிலான தாக்குதல் செய்யும் அணுகுமுறையை கடைப்பிடிப்பார்களோ என்பதை உறுதியாகக் கூறமுடியாதுள்ளது.

புலிகளுக்குப் பின்னான யாழ் குடாநாட்டிற்குரித்தான தீவிர தமிழ் தேசியவாதத்தை இவ்வாறாகத்தான் முளையிலே கிள்ளியெறிய வேண்டுமென யாராவது நினைத்தால் அதுவும் தவறான அணுகுமுறையே. ஏனெனில் புலிகள் முள்ளிவாய்க்காலில் வைத்து இராணுவ ரீதியாக மாத்திரமே தோற்கடிக்கப்பட்டுள்ளனர். ஆனால் தீவிர தமிழ் தேசியவாதம் என்பது குறிப்பாக யாழ்ப்பாண தமிழர்களிடையே இன்னமும் பரந்து விருட்சமாக உள்ளது. இதனை அரசியல் ரீதியாக ஓரளவிற்கேனும் ஓரங்கட்டுவதற்கு, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனையை தீர்ப்பது தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய போக்குகளில் பாரிய மாற்றங்கள் நிகழவேண்டும். அரசதரப்பில் இந்த மாற்றங்கள் நிகழாதவரைக்கும் இவ்வாறான தாக்குதல்கள் தமிழ் தேசியவாதத்தை தீனிபோட்டு வளர்ப்பதாகவே அமையும்.

பொதுவாக உலகின் பல நாடுகளில் பல்கலைக்கழக மாணவர்களின் அரசியல் விழிப்புணர்ச்சி என்பது அந்தந்த நாடுகளின் அரசியலில் பிரதான பங்கு வகித்து வருகின்றது. அண்மையில் எகிப்தில் முசாரப் அரசுக்கு எதிரான போராட்டத்தில் கெய்ரோ பல்கலைக்கழக மாணவர்கள் தீவிரமாக பங்கெடுத்திருந்தனர். யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு பேராசிரியர் க.கைலாசபதி அதன் தலைவராக பதவிவகித்த காலத்திலும், அதன்பின்னர் ஏறத்தாழ 1980ஆம் ஆண்டுவரையிலும், யாழ் பல்கலைக்கழக மாணவர்களிடையே தமிழ் பாராளுமன்ற தலைமைகளுக்கு எதிர்ப்பான நிலைப்பாடே பரவலாக இருந்து வந்தது. யாழ் பல்கலைக்கழகத்தில் மாத்திரமன்றி, கொழும்பு மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்களில் கல்விகற்ற தமிழ் மாணவர்கள் மத்தியிலும் தமிழ் பாராளுமன்ற தலைமையை எதிர்த்த, புதிய தமிழ் தலைமையை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் வலுவாக இருந்தது.

புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கத்தின் கொடும்பாவியை எரிக்கும்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

அளவிற்கு ஒருகாலத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவ சமுதாயத்தின் உணர்வுகள் இருந்தன. ஆனால் 1980ஆம் ஆண்டிற்கு பின்னர் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் தமிழ் பாராளுமன்ற தலைமைகளுக்கு எதிரான எதிர்ப்பு என்பது, தமிழீழம் அமைக்கும் தமிழ் இளைஞர்களின் ஆயதப்போராட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவாக மாறியது. 1983ஆம் இனவன்செயலும் தீவிர தமிழ் தேசியவாதப்போக்கிற்கு வலுச்சேர்க்க, அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட யாழ் பல்கலைக்கழக மாணவர்களில் பலர் ஆயதப்போராட்ட இயக்கங்களில் சேர்ந்தார்கள். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக யாழ் பல்கலைக்கழகம் என்பது ஆயதப்போராட்ட இயக்கங்களின் சந்திப்புக்கூடமாக மாறியது. 1986களின் பின்னர் புலிகள் எல்லா ஆயதப்போராட்ட இயக்கங்களையும் தடைசெய்தும் கொன்றழித்தும் தமது தீவிர தேசியவாதத்தின் உச்சமான பாசிசத்தை நிறுவியபோது, யாழ் பல்கலைக்கழகம் புலிகளிடம் சிறைப்பட்டது. யாழ் பல்கலைக்கழக மாணவர்களான விஜிதரன், விமலேஸ்வரன், செல்வகுமாரன், செல்வி, தில்லை, மனோகரன் போன்றவர்களையும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ராஜினி திரணகமவையும் புலிகள் கொன்றனர்.

தமிழ் பாராளுமன்ற தலைமைகளின் தீவிர தமிழ் தேசியவாதக் கருத்தையே பொதுவாக 1980களின் பின்னர் தோன்றிய இந்த ஆயதப்போராட்ட இளைஞர் குழுக்களும் பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆனால் ஆயதப்போராட்டத்தின் ஊடாக தமிழீழத்தை அமைத்தல் என்பதையே, தமிழ் பாராளுமன்ற தலைமைகளிலிருந்து ஒரு மாறுபட்ட அணுகுமுறையாக, இந்த இளைஞர் குழுக்கள் கொண்டிருந்தனர். இதனை அக்காலகட்டத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் உன்னிப்பாக கவனிக்கத்தவறினர். இந்தத்தவறு புலிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழகத்தை பொங்குதமிழ் போராட்டம்வரை கொண்டு சென்றது. இந்த தவறுகளிலிருந்து இன்றைய யாழ் பல்கலைக்கழக மாணவ சமுதாயம் பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் யாழ் பல்கலைக்கழகத்தை மீண்டும் தீயசக்திகள் ஆக்கிரமிக்காதவண்ணம் பாதுகாக்க வேண்டும்.

*

# வை.கோவுக்காக பிரபாகரன் இட்ட பொன் முட்டை!

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தலைவர் வை.கோபாலசாமியும் இன்று தமிழக அரசியலில் செல்லாக்காசாகிப் போனாலும், உலகம் முழுவதும் பரந்து வாழும் புலி ஆதரவாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவே அவர் இன்னமும் திகழ்ந்து வருகிறார். இந்த தமிழக அரசியல்வாதி வெற்று டப்பாவாக இருந்தாலும், அரசியல் அதிர்வெடிகளை வீசி பத்திரிகைத் தலைப்புகளைக் கைப்பற்றுவதில் வல்லவர். அவர் புலிகளின் வெறும் ஆதரவாளர் மட்டுமல்ல. தி.மு.கவில் இருந்த காலத்திலேயே தனது கட்சித் தலைவரான கருணாநிதிக்குத் தெரியாமல் (அதுவும் இந்திய அமைதிப்படையுடன் புலிகள் யுத்தம் செய்து கொண்டிருந்த நேரத்தில்), திருட்டுத்தனமாக தோணியில் ஏறி வன்னிக்குச் சென்று, புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு வந்தவர்.

இப்பொழுது பல நாட்டு அரசியல்வாதிகளைப் பற்றியும் திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டு வரும் ‘விக்கிலீக்ஸ்’, வை.கோ பற்றியும் அண்மையில் ஒரு தகவலை வெளியிட்டுள்ளது. அதாவது, வை.கோ தனது கட்சியைத் தொடங்குவதற்கு, புலிகள்தான் பண உதவி செய்தார்கள் என்பதே அது. ஆனால் இந்தத் தகவலைக் கேட்டு யாருமே ஆச்சரியமோ அதிர்ச்சியோ அடையவில்லை. வை.கோவும் இதை மறுத்ததாகத் தெரியவில்லை. அவ்வளவுக்கு அந்த விடயம் ஏற்கெனவே தமிழக அரசியல் வட்டாரங்களிலும், புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் விவாதிக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது.

ஆனால் வை.கோ தனது கட்சியைத் தொடங்கிய நேரத்தில், யாழ்ப்பாணத்திலிருந்த எமக்குக் கிடைத்த ஒரு தகவலை இந்த இடத்தில் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும். இந்தத் தகவலைச் சொன்ன இலங்கை வாலிபர், அந்த நேரத்தில் தமிழகத்தில் நீண்ட காலம் தங்கி இருந்ததுடன், வை.கோவின் ஆதரவாளர்களுடன் நெருக்கமான தொடர்புகளையும் கொண்டிருந்த ஒருவராவார்.

அவர் அறிந்த தகவல்களின்படி, தி.மு.கவை விட்டு வெளியேறிய வை.கோவும் அவரது ஆதரவாளர்களான கண்ணப்பன் போன்றோரும், அடுத்து என்ன செய்வது என்பது தொடர்பாக வை.கோவின் வீட்டில் கூடி ஆலோசித்துள்ளனர். அப்பொழுது வை.கோ புதிய கட்சி தொடங்கும் தனது திட்டத்தை முன்வைத்துள்ளார். அதற்கு அவரது ஆதரவாளர்கள், “அதற்கு நிறையப் பணம் தேவையே?” என வினவியுள்ளனர். அவர்களது கேள்வியைக் கேட்டு சிரித்த வை.கோ, அவர்களை அழைத்துச் சென்று தனது வீட்டின் அறையொன்னைத் திறந்து காட்டியுள்ளார். அந்த அறைக்குள் கட்டுக்

தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...

**கா**ட்டுப் பன்றி ஒன்று கிழங்கை அகழ்ந்து தின்ற பிறகு, மிச்சம் இருக்கும் கிழங்கைப் பழங்குடிகள் தின்பதாகப் பழந்தமிழ் இலக்கியத்தில் பதிவுகள் உள்ளன. அந்தப் பழக்கம் இன்றும் பழங்குடிகளிடம் உள்ளது. நமது ஆதி வாழ்க்கையைத் தேடி அலையும் வேட்கைதான் எங்களைக் காடுகளை நோக்கிச் செலுத்தியது. ஆதிவாசிகள் என்றாலே நிர்வாணமாகத் திரிபவர்கள், நர மாமிசம் உண்பவர்கள், வரைமுறையற்ற பாலுறவு கொள்பவர்கள் என்ற தப்பான கற்பிதங்கள் நம்மிடம் உள்ளன. ஆனால், உண்மையில் நாகரிகச் சமுதாயம் என்று சொல்லிக்கொள்கின்ற நம்மைவிட, மேம்பட்ட கலாச்சாரம் கொண்டவர்கள் ஆதிவாசிகள். தேவைக்கு மேல் எதையும் பயன்படுத்தாத



# புராதன கம்யூனிச சமூகத்தின் மீத மிச்சங்கள் இந்தியப் பழங்குடிகளிடம் இன்னமும் இருக்கின்றன!

**– ஆய்வாளர்களின் நூலில் தகவல்**

வாழ்க்கை, அடுத்தவர் உடைமைகளை ஆக்கிரமிக்காத பேராண்மை, எல்லா வளங்களையும் பகிர்ந்து வாழ்வது ஆகியவை இந்தியா முழுவதும் பரவிக்கிடக்கும் ஆதிவாசிகளின் பொதுக்குணங்கள்!

'போட்டிகள் நிறைந்த உலகமயச் சூழல்' என்ற பெயரில் யாரும் யாரையும் ஏமாற்றலாம், யாரும் எந்தப் பகுதியையும் ஆக்கிரமிக்கலாம் என்கிற தப்பான உணர்வு நம்மிடையே விதைக்கப்பட்டு உள்ளது. ஆனால் இதற்கு முற்றிலும் நேர்மாறானது ஆதிவாசிகளின் வாழ்க்கை.

ஒரிசா மாநிலத்தில் வசிக்கும் பூஞ்சியா பழங்குடி மக்கள், தங்கள் வாழ்க்கையைத் தங்கள் எல்லைக்குள்ளேயே அமைத்துக் கொள்கின்றனர். இத்தனைக்கும் வரையறுக்கப்பட்ட எல்லைக்கோடுகள் என்று எதுவும் கிடையாது. எல்லாமே மனக்கணக்குத்தான். ஒரு பூஞ்சியா ஆதிவாசி தங்களது எல்லைப் பகுதியைத் தாண்டி வேறு ஒரு பகுதியில் ஒரு சுள்ளி பொறுக்கி வந்தால்கூட, அந்த பூஞ்சியா இனமே ஒன்று சேர்ந்து அவரின் வீட்டை எரித்துவிடுவார்கள். ஒருவர் வீடு கட்ட வேண்டுமென்றால், எல்லோரும் அவருக்கு உதவுவார்கள். விளைச்சல் அவர்களுக்குத் தனித்தனியாக இருந்தாலும் கூட்டு அறுவடைதான். 20 மூடை நெல் விளைவித்தவருக்கும் இரண்டு மூடை நெல் விளைவித்தவருக்கும் சமமாகத்தான் விளைச்சல் பகிர்ந்தளிக்கப்படும்.

ஆதிவாசிகள் நிர்வாணமாக இருப்பார்கள் என்பதும் தவறான புரிதலே! மத்திய இந்தியாவில் வசிக்கும் பழங்குடிப் பெண்கள் தங்கள் மார்புகளை வெறும் ஆபரணங்களால் மறைப்பதை அங்கு யாரும் வக்கிரமாகப் பார்ப்பது இல்லை. அங்கு பெண்கள் தங்கள் துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும் மணவிலக்கு செய்வதற்கும் முழு உரிமை உண்டு. முக்கியமாகப் பழங்குடிகளிடத்தில் குடும்ப வன்முறை இல்லை. அவர்கள் தாங்கள் வளர்க்கும் நாயைக்கூட அடிப்பது இல்லை. விபச்சாரமும் இல்லை. பாலியல் பலாத்காரமும் இல்லை. அவ்வளவு ஏன், ஒரே ஒரு பிச்சைக்காரர் கூடப் பழங்குடிகளிடத்தில் இல்லை. மனநோயாளிகளை அவர்கள் தெய்வமாகக் கருதி, வீட்டுக்கு அழைத்து உணவும் மதுவும் கொடுத்து உபசரிக்கிறார்கள். ஆனால் நாமோ மெள்ள மெள்ள அவர்கள் பராமரிக்கும் காட்டு வளத்தைச் சுரண்டி, அவர்களின் வேர்களைப் பிடுங்கி வேறு ஒரு இடத்தில் நட முயற்சிக்கிறோம்.

பிரிட்டிஸ்காரர்களுக்கு எதிராக சிப்பாய் கலகத்துக்கு முன்பு போராடியவர்கள் பழங்குடிகளே. உலகமயமாக்கல், வளர்ச்சி, தாராளமயமாக்கல் என்ற பெயர்களில் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் வாழ்க்கையிலிருந்தே அவர்களை விரட்டிக்கொண்டு இருக்கிறோம்.

**பிற்குறிப்பு** : பழங்குடிகள் குறித்து ஆய்வு செய்பவர்களான தமிழகத்தைச் சேர்ந்த ரெங்கையா முருகன், ஹரிசரவணன் இருவரும் எழுதிய 'அனுபவங்களின் நிழல்பாதை' என்ற நூலில் உள்ள முக்கிய சில பகுதிகளே மேலே பிரசுரமாகியிருக்கிறது. இந்தியா உலகில் இரண்டாவது சனத்தொகை கூடிய நாடாக இருப்பதுடன், இன்னமும் பல தொல்குடியிருப்புகளையும் கொண்ட நாடாகவும் இருக்கின்றது. இன்னமும் அந்த தொல்குடி மக்களிடம் வர்க்கங்கள் உருவாவதற்கு முன்னர் நிலவிய புராதன கம்யூனிச சமுதாயத்தின் மிச்ச சொச்சங்கள் – அதாவது நல்ல மனிதப் பண்புகள் நிலவுவதை இந்த ஆய்வாளர்கள் இருவரும் நேரடியாகக் கண்டு அனுபதித்து தமது நூலில் பதிவு செய்திருப்பது, நவீன கம்யூனிச சமூகத்தை அமைக்கப் போராடும் புரட்சியாளர்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். *

## புலிகளின் பெண் தற்கொலைக் குண்டுதாரிகள் பற்றி கனடிய லிபரல் கட்சி முன்னாள் தலைவர் கூறியது இதுதான்!

கனடிய லிபரல் கட்சியின் முன்னாள் தலைவரான மைக்கேல் இக்ரானியேவ் புலிகளின் பெண் தற்கொலைக் குண்டுதாரிகள் பற்றிக் கூறிய ஒரு கருத்து இவ்வருட முற்பகுதியில் நடைபெற்று முடிந்த கனடியப் பொதுத் தேர்தலின் போது, அங்குள்ள புலி ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது. இக்ரானியேவ் அப்படி ஒரு கருத்தைக் கூறவில்லை என்றும் சிலரால் மறுக்கப்பட்டது.

இக்ரானியேவ் 2004ல் தான் எழுதி வெளியிட்ட The Temptations if Nihilism என்ற நூலின் 126ஆம் பக்கத்தில் கூறியிருப்பது இதுதான்:

"தமிழ் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகளில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள். இவர்கள் தமிழ் தலைவர் மேல் கொண்ட காதல் காரணமாகவே தங்கள் அர்ப்பணிப்பை வழங்குமாறு வழிப்படுத்தப்பட்டுள்ளார்கள். இறப்பின் பின்னர் தலைவருடன் புணர்ச்சிப் பரவச நிலையில் மீள் இணையலாம் என அவர்கள் கருதுகின்றனர். தமிழர் உச்சமாக மதிக்கும் கரும்புலிகள் பாலியல் உணர்வுகளுக்கு உந்தப்பட்டு, அதற்கு ஆட்பட்டே இவ்விறப்பு கலாச்சாரத்தில் ஈடுபட்டனர்".

*

## உலகெங்கும் ஏழரைக் கோடி இளைஞர்களுக்கு வேலையில்லை!

வேலை வாய்ப்பின்மை அதிகரிப்பு மற்றும் மோசமான தரத்தில் உள்ள தொழில்கள் காரணமாக ஒரு தலைமுறை இளைஞர்கள் பெரும் அச்சநிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

உலகெங்கும் ஏழரைக் கோடி இளைஞர்கள் வேலையில்லாமல் இருப்பதாக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் ஒரு அறிக்கையில் கூறியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் இதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வளர்ந்துவரும் நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் குறைந்த ஊதியம் தரும் தொழில்களில் அகப்பட்டிருக்கிறார்கள்.

இளைஞர் போராட்டங்கள் அதிகரித்தல், அரசியல் திட்டத்தின் மீதான அவநம்பிக்கை போன்ற நீண்ட காலப் பிரச்சினைகள் இதனால் உருவெடுக்கும் என்று அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

புள்ளிவிபரங்கள் இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று நம்புகின்ற சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம், வேலை இல்லாத இளைஞர்கள் கற்கை நெறிகளில் ஈடுபட்டோ அல்லது வீடுகளுக்குள் முடங்கியிருந்தோ காலத்தைக் கழிப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றது.

இன்னும் பலர் நிலைமை மாறுமென்று காத்திருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

*

## கல்மடுக்குளம் உடைப்பு சம்பந்தமாக புலிகளின் புதுக்கதை!

2009ல் வன்னியில் புலிகளை அழிக்கும் இறுதி யுத்தம் நடந்த போது, புலம்பெயர் நாடுகளிலிருந்த புலிகளின் பிரச்சார ஊடகங்கள் மக்களை ஏமாற்றித் திசைதிருப்பும் பொருட்டு, இட்டுக்கட்டப்பட்ட பல பொய்க் கதைகளைப் பரப்பின. அவற்றில் ஒன்று, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கல்மடு குளத்தை புலிகள் உடைத்து விட்டதன் காரணமாக, ஆயிரக்கணக்கான இராணுவத்தினா அதன் தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டனர் என்பதாகும். புலம்பெயர் நாடுகளில் வாழும் பல தமிழ் மக்களுக்கு, கல்மடு குளம் எங்கிருக்கிறது என்ற விபரமோ, அதன் நீர்ப்பரப்பளவு எவ்வளவு என்பதோ தெரியாது என்பதால் (குளம் உடைந்து பாய்ந்தால் முழங்காலுக்கு மேல் தண்ணீர் இருக்காது!), புலிகள் இவ்வாறான பொய்ப்பிரச்சாரத்தைக் 'கெட்டிக்காரத்தனமாக' கொண்டு நடாத்தினார்கள்.

'ஆனால் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு' என்பது போல, தாம் செய்த பொய்ப் பிரச்சாரத்தையே சொற்ப நாட்களுக்குள் மறந்து போய், கல்மடுக் குளத்தை புலிகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக இராணுவம்தான் உடைத்தது என இப்பொழுது புதுக்கதையொன்றை வெளியிட்டுள்ளனர். இந்த இராணுவ குள உடைப்பின் போதும், இராணுவத்துக்கு பலத்த உயிரிழப்பு ஏற்பட்டது என்றும் திரும்பவும் கதை அளந்துள்ளனர். (என்னே கற்பனை வளம்) அண்மையில் புலிகளின் புலம்பெயர் பிரச்சார ஏடுகளில் ஒன்றான 'புலத்தில்' என்ற ஏடு இவ்வாறான தடம் புரண்ட செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

*

# மாத்தையாவும் அவரது 300 தோழர்களும் பிரபாகரனின் உத்தரவில் தீர்த்துக் கட்டப்பட்டனர்!

**- ஜேர்மனியில் கைப்பற்றப்பட்ட நாட்குறிப்பில் தகவல்!!**



அண்மையில் ஜேர்னியிலுள்ள முன்னாள் புலி உறுப்பினர் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட நாட்குறிப்புப் புத்தகம் ஒன்றில் உள்ள தகவலின்படி, புலிகளின் முன்னாள் பிரதித் தலைவர் மாத்தையாவும் (கோ.மகேந்திரராசா) அவரது 300 ஆதரவாளர்களும், புலித் தலைவர் பிரபாகரனின் உத்தரவுப்படி வன்னியில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மாத்தையாவும் அவரது ஆதரவாளர்கள் 300 பேரும் புலிகளால் கொலை செய்யப்பட்டது உண்மையேயெனினும், அவர்கள் வன்னியில் வைத்துக் கொலை செய்யப்பட்டார்கள் என்ற தகவலும், மாத்தையாவை வன்னிக் காட்டுக்குள் கிட்டு, ரஹீம், யோகி ஆகியோர் முன்னிலையில் பிரபாகரனே சுட்டுக் கொன்றார் என்ற தகவலும், தவறான தகவல்கள் என புலிகளுடன் முன்பு இருந்த சிலர் மூலம் அறிய வருகிறது.

மாத்தையாவும் அவரது ஆதரவாளர்களும் (1993 வாக்கில்) கைதுசெய்யப்பட்ட காலகட்டத்தின் பின்னர், யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றும் முயற்சிகள் தீவிரமானது. அதன் காரணமாக புலிகள் தமது ஆயுதங்கள் உட்பட முக்கியமான பொருட்களை வன்னிக்கு இடம் மாற்றத் தொடங்கினர். தாம் கைதுசெய்து வைத்திருந்த கைதிகளையும் அங்கு இடம் மாற்றினர்.

இத்தகைய நிலைமைகளை எதிர்பார்த்து, மாத்தையாவையும் அவர்களது ஆதரவாளர்களையும் முன்னரே மிருசுவிலுக்கு அருகாமையிலிருந்த கரம்பகம் என்ற கிராமத்துக்கு இரண்டு மைல்கள் தெற்கே, கிளாலி கடலேரிக்கு வடக்காக உள்ள தென்னந் தோட்டமொன்றில் புதிதாக அமைக்கப்பட்ட முகாம் ஒன்றில், கடும் பாதுகாப்புக்கு மத்தியில் தங்க வைத்தனர். இந்த முகாம் அமைக்கப்பட்ட போது, அதற்காக முள்ளுக்கம்பிகள், கிடுகு. தளபாடங்கள் என்பவற்றை உழவு இயந்திரத்தில் ஏற்றிப் பறித்த தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பகுதிகளைச் சேர்ந்த சாரதிகளுக்கு இந்த விடயம் தெரிய வந்து, அவர்கள் அந்த நேரத்திலேயே இதைச் சிலரிடம் இரகசியமாகத் தெரிவித்திருந்தனர்.

1995 அக்டோபர் 30ஆம் திகதி புலிகள் யாழ்ப்பாணத்தை இராணுவத்திடம் பறிகொடுத்துவிட்டு வன்னிக்குப் பின்வாங்கிய நேரத்தில், மாத்தையாவைத் தவிர, அவருடைய ஆதரவாளர்கள் அத்தனை பேரையும் தாம் பின்வாங்குவதற்கு முன்னதாகக் கொலை செய்துவிட்டதாகத் தெரிய வருகிறது. மாத்தையாவை மட்டும் வன்னிக்குக் கொண்டு சென்று சில காலம் வைத்திருந்துவிட்டு, பின்னர் அவரையும் ஒரு கட்டத்தில் கொலை செய்துவிட்டனர். இந்தக் காலகட்டத்தில்தான், பிரபாகரனிடம் பேட்டியெடுக்கச் சென்ற இந்தியப் பத்திரிகையாளர் அனிதாப் பிரதாப் என்ற பெண்மணிக்கு மாத்தையாவை நேரடியாக பிரபாகரனே காட்டியுள்ளார். மாத்தையாவின் மனைவி (புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்) தனது கணவரைச் சந்திக்க அனுமதிக்கும்படி பல தடவை பிரபாகரனிடம் வேண்டியும், அவர் ஒருமுறை தானும் தனது கணவரைச் சந்திக்க வாய்ப்பளிக்கப்படவில்லை.

வன்னிக் காட்டுக்குள் பிரபாகரனுக்கும் மாத்தையாவுக்கும் நடந்த மோதல் சம்பவம் வேறு. இந்திய அமைதிப்படை காலத்தில், இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுடன் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்தினர். ஆனால் இந்திய அமைதிப்படையை பிரேமதாசவுடன் சேர்ந்து திருப்பி அனுப்புவதற்காக பேச்சுவார்த்தை வேசம் போட்ட பிரபாகரன், இந்தியப்படை போனதும் பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டு மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தார். அவரது இந்த முடிவை பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அன்ரன் பாலசிங்கம், யோகி, அப்போதைய அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி(தமிழ்ச் செல்வனின் அண்ணன்) ஆகியோர் விரும்பவில்லை. மாத்தையாவும் அவர்களது நிலைப்பாட்டிலேயே இருந்தார்.

இந்தக் கட்டத்தில்தான், பிரபாகரன் முன்னிலையில் முல்லைத்தீவுக் காட்டுக்குள் மாத்தையாவுக்கும் பிரபாகரனின் விசுவாசியான கிட்டுவுக்கும் பேச்சுவார்த்தையை முறித்தது சம்பந்தமான வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, ஒரு கட்டத்தில் மாத்தையா தனது பிஸ்டலை கிட்டுவை நோக்கி நீட்ட வேண்டிய சூழல் உருவானது. பின்னர் அது பிரபாகரனின் தலையீட்டால் தவிர்க்கப்பட்டது. அதன் பின்னர்தான் யோகி, மூர்த்தி ஆகியோர் ஓரங்கட்டப்பட்டு, மாத்தையா தலைமையிலான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் பிரபாகரனால் கலைக்கப்பட்டது. பாலசிங்கம் வழமைபோல பிரபாகரனின் 'சைட்' எடுத்துத் தனது தலையைப் பாதுகாத்துக் கொண்டார்.

இந்த முரண்பாட்டுக்குப் பிரதான காரணம், மாத்தையா பிரேமதாச அரசுடன் பேசி ஏதாவது ஒரு தீர்வுக்குப் போக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்ததுதான். இதன் காரணமாக பிரபாகரனுக்கு மாத்தையா மீது அன்று தொடங்கிய 'கறள்', இந்திய அமைதிப்படை காலத்தில் மேலும் தீவிரமாகியது. ஏனெனில் மாத்தையா, மீண்டும் இந்திய உதவியுடன் ஒரு தீர்வுக்குப் போக வேண்டும் என்பதையே வலியுறுத்தினார். தனித்தமிழ் ஈழம் அமைக்கும் கனவில் இருந்த பிரபாகரன், யுத்தத்தைத் தவிர வேறு எதையும் ஏற்கத் தயாராக இருக்கவில்லை. ஆனால் மாத்தையாவின் கருத்துக்கு இயக்கத்துக்குள் பலமான ஆதரவு இருந்ததால், அவரை இந்திய உளவு அமைப்பான 'றோ'வின் கையாள் என பிரபாகரன் திட்டமிட்டு முத்திரை குத்தி, துரோகியாக்கி இறுதியில் அவரது வாழ்க்கையையும் முடித்துவிட்டார்.

என்ன செய்தும் என்ன? பிரபாகரனால் இறுதியில் தமிழ் மக்களை மட்டுமல்ல, தனது உயிரையும் தனது குடும்பத்தின் உயிரையும்கூட காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. வரலாற்றுப் போக்கிற்கு எதிராக ஓடிய அனைத்து மனிதர்களும் இவ்வாறான முடிவையே எட்டியுள்ளனர்.

**- உள்வீட்டான்**

*

## அமெரிக்க – பிரிட்டிஸ் தலைவர்கள் ஒரு கிளாஸ் மதுவுடன்
### உலகப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்!
### ஜனாதிபதி ஒபாமாவின் ஆசை இது!!

2011 மேமாதம் பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பிரிட்டிஸ் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார். அப்பொழுது அவர், உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் சீனாவும் இந்தியாவும், தற்பொழுது அமெரிக்காவும் ஐரோப்பாவும் வகித்து வரும் உலக தலைமைத்துவப் பாத்திரத்தைக் கைப்பற்றக்கூடும் என்ற கருத்தை நிராகரித்தார்.

அங்கு பேசிய ஒபாமா, ''எதிர்காலத்தில் இவ்வாறான நாடுகளின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கலாம். இவ்வாறான நாடுகள் உலக தலைமைத்துவத்திற்கான பொறுப்புகளை ஏற்றாலும், அமைதி, சுபீட்சம் என்ற நூற்றாண்டு கால இலக்குகளை நிறைவேற்றுவதற்கு எமது கூட்டணியின் பங்களிப்பு இன்றியமையாததாகவே இருக்கும். தலைமைத்துவம் காலத்திற்கேற்ப மாற்றத்தினைக் கொண்டிருக்க வேண்டும். எவ்வாறெனில், நாளடைவில் அமெரிக்க – பிரிட்டிஸ் தலைவர்கள் ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு, ஒரு கிளாஸ் மதுவுடன் உலகின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அம்மாற்றம் அமைந்திருக்க வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

*

## கனடாவில் தீபாவளி கொண்டாட்டம்
### சிறப்பு விருந்தினராக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

கனடாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் கடந்த வருடத்தைப் போல இவ்வாண்டும் (2011), இந்துக்களின் பெருநாளான தீபாவளியை சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது. இவ்வருட தீபாவளிக் கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக, இலங்கையின் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சரும், ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவருமான வாசுதேவ நாணயக்கார அவர்கள் கலந்து கொள்கிறார்.

றொறன்ரோ நகரில், 1133 லெஸ்லி வீதி, நோத் யோர்க் என்ற இடத்தில் அமைந்துள்ள, கொரிய கலாச்சார கல்வி நிலைய மண்டபத்தில், நவம்பர் 06, 2011 அன்று மாலை 5.00 மணிக்கு இந்நிகழ்வு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நிகழ்வில் பல சமய – கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் இலங்கையர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு, ஒட்டாவாவிலுள்ள உயர் ஸ்தானிகர் சித்திராங்கனி வாகீஸ்வர அவர்களும், றொறன்ரோவிலுள்ள கொன்சலேற் ஜெனரல் கருணரத்ன பரணவிதானவும் அழைப்பு விடுத்துள்ளனர்.

*

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்துக்கு திருமணம் செய்து வைத்த பாரதிதாசனும் எம்.ஜி.ஆரும்!

### மனம் திறக்கிறார் அவரது மனைவி!!



'உங்கள் வாழ்க்கை வரலாற்றை பத்திரிகையில் எழுதணும்' என்று பாட்டாளிக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திடம் ஒரு நிருபர் கேட்டாராம். பட்டுக்கோட்டையார் அந்த நிருபரை ராயப்பேட்டையிலிருந்த தம் வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டு சிறிது தூரம் நடந்திருக்கிறார். பிறகு இருவரும் ரிக்சாவில் ஏறி மௌண்ட் ரோட்டுக்கு வந்திருக்கிறார்கள். அப்புறம் பஸ்ஸைப் பிடித்து கோடம்பாக்கம் ரயில்வே கேட்டில் இறங்கி இருக்கின்றனர். கேட்டைக் கடந்து ஒரு டாக்ஸி பிடித்து வடபழநியில் தன் பாடல் பதிவான ரெக்கார்டிங் ஸ்ட்டுடியோவில் போய் இறங்கி இருக்கின்றனர். கூடவே வந்த நிருபர், "கவிஞரே, வரலாறு" என்று நினைவூட்டி இருக்கிறார்.



உடனே பட்டுக்கோட்டையார், "முதலில் நடையாய் நடந்தேன், ரிக்சாவில் போனேன், பிறகு பஸ்சில் போக நேர்ந்தது. இப்போது டாக்ஸியில் போகிறேன். இதுதான் என் வாழ்க்கை. இதுலே எங்கே இருக்குது வரலாறு?" என்று சிரித்துக் கொண்டே போய்விட்டாராம். இந்த எளிமையைப் பாட்டில் வைத்ததால்தான், பட்டுக்கோட்டை மக்களின் மனதில் பாட்டுக்கோட்டை கட்டி வாழ்கிறார்.

பட்டுக்கோட்டைக்கு அடுத்த செங்கப்படுத்தான்காடுதான் கவிஞரின் பூர்வீகக் கிராமம். அவர் பாட்டெழுதி சம்பாதித்து வாங்கிய நிலத்தில் வீடு கட்டி வாழ்கிறார் கவிஞரின் மனைவி கௌரம்மாள். அவர் பட்டுக்கோட்டையாரோடு வாழ்ந்தது இரண்டே ஆண்டுகள்தான். எனினும் அந்த நினைவுகளைப் பொக்கிசமாகப் பாதுகாத்து வருகிறார்.

"எனக்கு பட்டுக்கோட்டை பக்கத்துல ஆத்திக்கோட்டைதான் சொந்த ஊர். எங்க அண்ணன் சின்னையனும், 'அவுக'ளோட அண்ணனும் சிங்கப்பூர்ல வேலை பார்க்கும் போது சினேகிதமானவங்க. எனக்கு ஒரு தங்கச்சி இருக்கா, அவளுக்குக் கல்யாணம் பண்ணணும்னு எங்க அண்ணன் சொல்லியிருக்கார். அப்ப அவுக அண்ணன் ஒண்ணும் சொல்லலையாம். சிங்கப்பூர்லேயிருந்து லீவுல ஊருக்கு வந்தபோது தம்பியைக் கூட்டிட்டு என்னைப் பொண்ணு பார்க்க வந்துட்டார்.



அப்ப அவுக, அண்ணனுக்குத்தான் பொண்ணு பார்க்க போறோம்னு நினைச்சுக்கிட்டு வந்தார்களாம். பொண்ணு பார்த்துட்டு ஊருக்குத் திரும்பும்போது, 'பொண்ணு எப்படிடா இருக்கு' என்று அண்ணன் கேட்க, அழகாகத்தான் இருக்குன்னு இவுக சொல்லியிருக்காக. 'உனக்குத்தாண்டா இந்தப் பொண்ணுன்னு அண்ணன் சொன்னதும், இவகளுக்கு ரொம்ப சந்தோசமாப் போச்சாம். அப்போ வீட்டிலே வந்து எழுதினதுதான், 'அமுதவல்லி' படத்திலே வந்த 'ஆடை கட்டி வந்த நிலவோ, கண்ணில் மேடைகட்டி ஆடும் எழிலோ' என்ற பாடல். இப்போ தெரிஞ்சுக்கோங்க நாந்தான் ஆடை கட்டி வந்த நிலவு" என்று மலர்ந்து சிரிக்கிறார் கௌரம்மாள்.

"அவுகளோட இருபத்தேழாவது வயசுல எங்களுக்குக் கல்யாணம் நடந்துச்சு. தலைமை, பாவேந்தர் பாரதிதாசன். கல்யாணத்தை முன்னுக்கு நின்னு நடத்தினது மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவருடைய மனைவி ஜானகிக்கு சொந்தமான வீடு, லாயிட்ஸ் ரோட்ல இப்பவும் இருக்கு. அங்கதான் எங்க கல்யாணம். யார் யாரோ பெரிய மனுசங்கள்லாம் வந்திருந்தாங்க. கல்யணம் முடிஞ்சதும், ராயப்பேட்டை ஸ்ரீனிவாசப் பெருமாள் சன்னிதி தெரு ரெண்டாம் நெம்பர் வீட்டுலதான் முதன் முதலா குடிபோனோம்."

"அவுகளுக்கு முதல்ல சினிமாவுல நடிக்கத்தான் ஆசை. பாட்டெழுத இல்லை. அந்த ஆசையில்தான், 'வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்துக்கு வசனம் எழுதின சக்தி கிருஸ்ணன் நாடக சபாவுல நடிகரா சேர்ந்தார்.

பாவேந்தர்கிட்ட உதவியாளராகச் சேர்ந்த பிறகுதான் அவுகளுக்கு, பாட்டு எழுதற ஆசையே வந்திருக்கு''

''அன்னைக்கு அவுக அண்ணன் பொஞ்சாதிக்கு வளைகாப்பு. அப்போ நான் கிண்டலா, 'அக்காளுக்கு வளைகாப்பு, அத்தான் மொகத்துல பொன்சிரிப்புன்னு' சொன்னேன். இதை, 'கல்யாணப் பரிசு' படத்துல, அவுக பல்லவியா போட்டு பாட்டாக எழுதிட்டாக. 'இது நீ எழுதுன பாட்டு. இந்தா பிடி சன்மானம்ன்னு, அந்தப் பாட்டு எழுதினதுக்குக் கிடைச்ச பணத்தை என் கையில கொடுத்தாக.''

''என்னைய அதிகமா வெளியில எங்கேயும் கூட்டிட்டுப் போனது கிடையாது. ஔவையார் பட ப்ரிவியூக்கும், அடையார்ல நடந்த ஒரு சூட்டிங்குக்கும்தான் நான் அவுககூட வெளியில போனேன். அவுக இன்னும் ரெண்டு வருசம் என்கூட வாழ்ந்திருக்கக் கூடாதான்னு எனக்கு ஆயாசாமா இருக்கு''

''அவுகளுக்கு சைனஸ் தொந்தரவு இருந்துச்சு. தலையை வலிக்குதுன்னு சிரிச்சுக்கிட்டே ஆஸ்பிட்டலுக்குப் போனாங்க. அப்புறம் திரும்பி வரவே இல்லை. மனசு கஸ்டமாக இருக்கும் போதெல்லாம், 'ஆடை கட்டி வந்த நிலவு' பாட்டைத்தான் கேட்பேன்'' என்று பெருமூச்சு விடுகிற கௌரம்மாளுக்கு ஒரே மகன். பெயர் குமாரவேலு. தமிழக அரசின் செய்தித்துறையில் பணிபுரிகிறார்.

(பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு உறுதிமிக்க ஆதரவாளர் என்பதுடன், தனது அநேகமான திரைப்பாடல்களை உழைப்பாளி மக்களை முன்னிலைப்படுத்தியே எழுதியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் 'கல்யாணப் பரிசு' போன்ற படங்களுக்கு சுவை ததும்பும் அருமையான காதல் பாடல்களையும் எழுதியுள்ளார்.)

*

# எழுத்தாளர்கள் தொட வேண்டிய 'மை'யும் தொடக்கூடாத 'மை'யும் பற்றி கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன்

தென்னிந்திய தமிழ் சினிமா உலகில் மிகப்பெரும் நகைச்சுவை நடிகர்களாகக் கொடி கட்டிப் பறந்தவர்கள் என்.எஸ்.கிருஸ்ணன் – மதுரம் தம்பதியினர். கிருஸ்ணன் வெறும் நகைச்சுவை நடிகர் மட்டுமல்ல. அவர் பல அரிய மனித நேய – சீர்திருத்த – முற்போக்குக் கருத்துகளையும் தனது சினிமாத்துறையின் மூலம் வெளிப்படுத்தி வந்துள்ளார். தமிழகத்தின் மாபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் ப.ஜீவானந்தம் அவர்களுடன் அவர் நெருக்கமான நட்புக் கொண்டிருந்ததுடன், சோசலிச சோவியத் யூனியனுக்கும் உவகையுடனும் பெருமையுடனும் சென்று வந்தவர். அவர், எழுத்தாளர்கள் எப்படி எழுத வேண்டும் என்பதை, பின்வருமாறு தமக்கேயுரிய ரசனை நடையில் விளக்கிக் கூறியுள்ளார்:

''எழுத்தாளர்கள் தங்கள் பேனாவை எப்படிப்பட்ட மையைத் தொட்டு எழுதுகிறார்கள் தெரியுமா? சிலர் பெருமையில் தொட்டு எழுதுகிறார்கள். வேறு சிலர் பொறாமையில் தொட்டு எழுதுகிறார்கள். சிலர் பழமையில் தொட்டு எழுதுகிறார்கள்.

அவர்கள் தொடக்கூடாத 'மை', மடமை, கயமை, பொய்மை, வேற்றுமை. அவர்கள் நீக்க வேண்டிய 'மை'கள், வறுமை, ஏழ்மை, கல்லாமை, மடமை, அறியாமை.

அவர்கள் நன்மை தரக்கூடிய செம்மை, நேர்மை, புதுமை ஆகியவற்றைத் தொட்டு வாசகர்களின் நெஞ்சத்தைத் தொடும்படி எழுத வேண்டும்''

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**'' எழுத்தாளர்கள் மனித ஆன்மாவின் சிருஸ்டிகர்த்தாக்கள்''**

**– ஸ்டாலின்**

3ம் பக்கத்தொடர்ச்சி...

கட்டாக மலை போல பண நோட்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அவர்கள் மலைத்துப்போய் விட்டனர்.

வை.கோவின் விசுவாசத்துக்குரிய வெளிநாடு ஒன்றுதான், அந்தப் பணத்தை வாரி வழங்கியதாக அவரது ஆதரவாளர்கள் நினைத்தனர். ஆனால் வை.கோ அவர்களைப் பார்த்து புன்முறுவல் செய்துவிட்டு, ''எல்லாம் தம்பி (பிரபாகரன்) தந்த நன்கொடைதான்'' என விளக்கம் அளித்துள்ளார். அவரது ஆதரவாளர்கள் நினைத்த அண்ணன் கொடுத்தால் என்ன, அல்லது வை.கோ சொன்ன தம்பி கொடுத்தால் என்ன பணம் வந்துவிட்டது.

ஆனால் பணம் கோடி கோடியாக வந்தென்ன? தமிழக மக்கள் வை.கோவுக்கு ,தமிழக சட்ட சபையில் ஒரு 'சீட' தன்னும் கொடுக்கிறார்கள் இல்லையே!

*

# தீபாவளி தமிழர்கள் திருநாளன்று!

### தமிழக ஆய்வாளரின் திராவிட நோக்கிலான கருத்து!!



இன்று தமிழ்நாட்டில் விறுவிறுப்பாகக் கொண்டாடப்பெறும் திருவிழா தீபாவளி. நகர்ப்புறம் சார்ந்ததாகவும், துணி, எண்ணெய், மாவு, பட்டாசு ஆகிய பெருந்தொழில்களின் பொருளாதாரம் சார்ந்ததாகவும் இத்திருவிழா கொண்டாடப்படுகிறது. தகவல் தொடர்பு சாதனங்கள் தரும் பகட்டான விளம்பரங்களால், இது தமிழர்களின் ‘தேசியத் திருவிழா’ போலக் காட்டப்படுகிறது. ஆயினும் தைப்பொங்கல் திருவிழா போல மரபுவழிப் பொருளாதாரம் சார்ந்ததாகவும், ஒரு திருவிழாவுக்குரிய உள்ளாந்த மகிழ்ச்சியோடும் சடங்குகளோடும் கொண்டாடப் பெறுவதாக தீபாவளி அமையவில்லை. தீபாவளி தமிழரின் திருவிழாவாக அமையாமல் ‘இந்து’க்களின் திருவிழாவாக அமைகிறது.

தமிழர் திருவிழா – இந்துக்களின் திருவிழா என்ற வேறுபாட்டினை எவ்வாறு பிரித்தறிவது? பழைய வழிபாட்டு முறைகளோடு கூடிய தொல் சமய வழிபாடுகள், இவற்றின் சாரத்தையும் உள்வாங்கிக்கொண்டு வளர்ந்த சைவம், வைணவம் ஆகியவையே தமிழர்களின் பழைய மதங்களாகும். இவை காட்டும் திருவிழாக்களான கார்த்திகைத் திருவிழா, திருவாதிரைத் திருவிழா, தைப்பூசத் திருவிழா, மாசிக்களரி எனப்படும் சிவராத்திரித் திருவிழா, பங்குனி உத்திரம், சித்திரைப் பிறப்பு, வைகாசி விசாகம், ஆடிப் பதினெட்டாம் பெருக்கு ஆகியன சைவமும் வைணவமும் பெருஞ் சமயங்களாக நிலைபெறுவதற்கு முன்னரே தமிழர்கள் கொண்டாடிய திருவிழாக்களாகும்.

தீபாவளி தமிழ்நாட்டின் மரபுவழிப் பொருளாதாரத்தோடும் பருவ நிலைகளோடும் சடங்குகளோடும் தொடர்பில்லாத ஒரு திருவிழா. தீபாவளியின் அடையாளமான வெடி, அதன் மூலப்பொருளான வெடி மருந்து ஆகியவை தமிழ்நாட்டிற்கு பதினைந்தாம் நூற்றாண்டுவரை அறிமுகமாகவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். விளக்குகளின் வரிசை எனப் பொருள்படும் தீபாவளி (தீப + ஆவளி) என்னும் வட சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லும் புழக்கத்தில் இல்லை.

நரகாசுரன் என்னும் அரக்கன் கிருஸ்ணனால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் தீபாவளிக் கதை திராவிடப் பண்பாட்டோடு தொடர்புடையதன்று. மாறாக பிராமணிய மதத்தின் சார்பாக எழுந்த கதையாகும். இந்த நாளே பிராமணிய மதத்தின் எதிரியான சமண மதத்தின் இருபத்து நாலாம் தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் வீடுபேறடைந்த (இறந்த) நாளாகும். தான் இறந்த நாளை வரிசையாகத் தீபங்களை ஏற்றிக் கொண்டாடுமாறு மகாவீரர் தம் மதத்தவரைக் கேட்டுக்கொண்டார். ஆகவே, பிராமணிய மதத்தின் பழைய எதிரிகளான சமணர்களும் தீபாவளியைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

எனவே நரகாசுரன் அழிந்ததாக பிராமணியத் தீபாவளிக் கதைகள் குறிப்பிடுவது மகாவீரர் இறந்த நாளையே ஆகும். விசயநகரப் பேரரசான, ‘இந்து சாம்ராஜ்ஜியம்’ தமிழ்நாட்டில் நுழைந்த கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு தொடங்கியே தீபாவளி இங்கு ஒரு திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

இந்தக் காரணம் பற்றியே தமிழ்ப் பிராமணர்களைவிட, தமிழ்நாட்டில் உள்ள தெலுங்குப் பிராமணர்களே தீபாவளியைப் ‘பக்தி சிரத்தை’யுடன் கொண்டாடுகின்றனர். வடநாட்டு இந்துக்களிடமும் சமணர்களிடமும் இல்லாதபடி தமிழ்நாட்டில் இத்திருவிழா நாளன்று எண்ணெய் தேய்த்துக் குளிக்கின்றனர். எண்ணெய் தேய்த்துக் குளித்தல் என்பது தமிழ்நாட்டில் நீத்தார் நினைவில் இறுதி நாளைக் குறிக்கும் சடங்காகும். தமிழ்நாட்டுப் பிராமணர்களும் இத்திருவிழாவை இறந்தார் இறுதிச் சடங்கு போல ‘கங்கா ஸ்நானம்’ செய்து கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. ஆகவே உண்மையில் இத்திருவிழா பார்ப்பனிய மதத்தின் திருவிழாவேயன்றித் தமிழர் திருவிழா ஆகாது.

‘நரகனைக் கொன்ற நாள் நல்ல நாள் விழாவா’ என்று பாரதிதாசன் பாடுவதும் இங்கே நினைவுக்குரியது.

*

# ஆனந்தசங்கரியின் இறைஞ்சல் கடிதமும் சம்பந்தனின் திமிர்த்தனமும்

'தமிழ் கட்சிகளின் அரங்கு' என்ற விசாலமான தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பை தந்திரமாக உடைத்து, வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியையும், த.சித்தார்த்தன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தையும் (புளொட்) தம்முடன் சேர்த்துக் கொண்ட சம்பந்தன் – மாவை – சுரேஸ் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தற்பொழுது அவர்கள் இருவரையும் செல்லாக் காசாகவே நடாத்தி வருகிறது. இந்த உண்மையை அண்மையில் ஆனந்தசங்கரி சம்பந்தனுக்கு எழுதிய 'இறைஞ்சல்' கடிதம் துலக்கி நிற்கிறது.

அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் செய்துவரும் காணிப்பதிவு நடவடிக்கையை, தமிழர்களுக்கு எதிரான இனவாத நடவடிக்கையாகக் கருதி (அரசாங்கத்தின் இந்தத் திட்டம் இலங்கையின் எல்லா இடங்களிலும் எல்லா இன மக்களிடமும் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும், ஏற்கெனவே கொழும்பின் சில பகுதிகளில் அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாணத்திலுள்ள நீதிபதி ஒருவரை விசாரித்த போது தெரிய வந்தது) ஆனந்தசங்கரி போன்றவர்கள் அச்சமடைந்து பிரச்சாரம் மேற்கொண்டு வரும் சூழலில், அதுபற்றி ஆனந்தசங்கரி கூட்டமைப்பு சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில் உள்ள சில வசனங்கள் பின்வருமாறு இருக்கின்றன.

"...எமக்கு ஏற்பட்டிருக்கும் இப்பயத்திற்குக் காரணம் கடந்த 2011 – 09 – 25 அன்று நடைபெற்ற எமது கட்சியின் மகாநாட்டில் தமிழரசுக் கட்சி மட்டும் கலந்து கொள்ளாமையே ஆகும். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் புளொட் அமைப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பூரணமான ஆதரவைக் கொடுத்திருந்தது. இவ்வமைப்புக்களின் வேட்பாளர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளடங்கியிருந்தனர். ஆனால் துரதிஸ்ட்டவசமாக இதுவரை தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய அமைப்புகளின் ஆதரவாளர்கள் தாமாக முன்வந்து கொடுத்த ஆதரவை நீங்கள் ஏற்றுக்கொண்டதாகவோ, அல்லது அச்செயலை மெச்சியதாகவோ இன்றுவரை தெரியவில்லை"

இந்தக் கடிதத்திற்குப் பதில் சொல்வது போல, ஆனந்தசங்கரியால் கூட்டப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாடு சட்டப்படி செல்லுபடியற்றதென சம்பந்தன் தெரிவித்துள்ளார். தாமே தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமாக இருப்பதால், தமது அனுமதியின்றி எவரும் மாநாட்டைக் கூட்ட முடியாது எனவும் அவர் கூறியுள்ளார். இதுபற்றி தான் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு காலத்தில் 'உடுப்பிட்டி சிங்கம்' என வர்ணிக்கப்பட்டு, பின்னர் அமிர்லிங்கத்தை புலிகள் சுட்டபோது, கூட இருந்து தானும் சூடு வாங்கி, உயிர்தப்பி, பின்னர் இந்தியாவில் அஞ்ஞாதவாசம் செய்து, தனது கடைசிக்காலத்தில் நாடு திரும்பி, பதவி ஆசை காரணமாக புலிகள் உருவாக்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் பாராளுமன்ற உறுப்பினர் பதவி என்ற பிச்சையைப் பெற்று, மரணத்தின் பின்னர் புலிகளின் 'மாமனிதர்' பட்டத்தையும் பெற்ற மு.சிவசிதம்பரத்தின் நிலைதான் ஆனந்தசங்கரியின் இன்றைய நிலையைப் பார்க்கையில் நினைவுக்கு வருகின்றது.

இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களாகப் பவனி வந்து, 'வீர' முழக்கமிடும் பலர், அன்று புலிகளின் காலடியில் பதவிக்காகவும், உயிர் பயத்தின் நிமித்தமாகவும் சாஸ்டாங்கமாக விழுந்த கிடந்த நேரத்தில், அன்று தனது உயிரையும் பதவியையும் துாசாக மதித்து, புலிகளின் அராஜகங்களுக்கு எதிராக 'வீரனாக' நின்ற ஆனந்தசங்கரியா இப்படி சந்தர்ப்பவாதி சம்பந்தனிடம் கெஞ்சுவது என எண்ணுகையில், உண்மையில் அவர் மீது அனுதாபம்தான் வருகிறது.

திரு. ஆனந்தசங்கரி அவர்களே! தொடர்ந்தும் சம்பந்தன் போன்ற அகங்காரம் பிடித்த அரசியல்வாதிகளிடம் உங்களை அடகு வைக்காமல், சுதந்திரமாகவும் நேர்மையாகவும் உங்கள் இறுதி அரசியல் வாழ்க்கையைத் தொடர்வதே உங்களுக்குப் பெருமை சேர்க்கும்.

***சி. செல்லத்துரை – உடுவில்***

*

அக்கினி குஞ்சொன்று கண்டேன் அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை
வைத்தேன்
வெந்து தணிந்தது காடு – தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?

– பாரதி

# வரம் வாங்கி வந்தவர்கள்

**- சன்னதன்**



தன்னை நோக்கிக் கடுந்தவம் புரிந்த அசுரன் ஒருவன் முன் சிவபெருமான் தோன்றி, ''உன் தவத்தை மெச்சினேன். வேண்டும் வரம் கேள்'' என்றார். அவனும், ''நான் யார் தலையில் கை வைக்கிறேனோ, அவன் தலை சுக்கு நூறாக வெடித்துச் சாக வேண்டும்'' என்று கேட்க, சிவனும் ''அப்படியே ஆகுக'' என்றார். வரம் பெற்ற அவனோ சிவன் தலையிலேயே கை வைக்க வந்தான். அஞ்சி ஓடிய சிவபெருமான் வில்வ மரத்துக் காய் ஒன்றுக்குள் ஒளிந்து கொண்டார். அசுரனோ அவ்விடத்தை விட்டு விலகாது காத்திருக்க, நாராயணன் மோகினி வடிவமெடுத்து வந்து, அசுரனைத் தனது அழகில் மயக்கி, அவன் தலையில் அவனையே கை வைக்க வைத்து, அவனைச் சாகடித்து சிவனை மீட்டார். இவ்வாறு ஒரு தொன்மக்கதை உண்டு.

பத்து ஆண்டுகளைக் கடந்திருக்கும் அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல் சம்பவமும், பின் லேடன் வரலாறும் மேற்குறித்த கதையை நினைவுக்குக் கொண்டு வருகின்றது. தேசியத்தின் போர்வையிலும், விடுதலையின் போர்வையிலும் உள்ளூர்ச் சண்டியர்களாக இனங்காணப்பட்ட கொடூரர்கள் பலரை, உலகச் சண்டியர்களாக தரவரிசைப்படுத்திய அமெரிக்கா – பிரித்தானியா போன்ற உலகத் தாதாக்கள், உலகையும் நெருக்கடிக்குள்ளாக்கி தம்மையும் நெருக்கடிக்குள்ளாக்கி நிற்பது வரலாற்றில் புதுமையான நிகழ்வல்ல.

இப்படி வரம் அருளி வதைத்த இடங்களில் இலங்கையும் ஒன்று. தங்களது நாடுகளில் புலிகளை பயங்கரவாதிகள் என்று பட்டியலிட்டுவிட்டு, இலங்கையில் அவர்களைப் போராளிகளாகச் சிலாகித்து, ஏகப்பிரதிநிதிகளாக்கி, பேரம் பேசும் நாடகங்களும் நடாத்தினார்கள். இன்றும்கூட, சர்வதேச விதிமுறைகளை அரசும் மீறியது, புலிகளும் மீறினார்கள் எனச் 'சப்பைக்கட்டு' கட்டுகிறார்கள்.

அன்றும் இன்றும் அகதிக் கோரிக்கை வைப்பவர்களைத் திருப்பி அனுப்புவதில் முன்னணி வகிக்கும் நாடு பிரித்தானியா. இவர்கள் புலிகளுக்குக் கம்பளம் விரித்த சம்பவங்களுக்கு உதாரணமாக ஒன்றை இங்கு நினைவு கூரலாம். இதனை புலிகளின் அரசியல் ஆலோசகராகவும் பிரதம பேச்சாளராகவும் திகழ்ந்த அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியாரான அடேல் அவர்களின் ஆவணப்படுத்தலில் இருந்தே மேற்கோள் காட்டலாம். அவர் தான் எழுதிய 'சுதந்திர வேட்கை' என்ற நூலில் (பக்கம் 332 – 333) பின்வருமாறு கூறுகிறார்.

''.....கிட்டுவின் துண்டிக்கப்பட்ட காலுக்கு சிகிச்சை பெறுவதற்காக அவரை லண்டனுக்கு அனுப்பத் தாம் விரும்புவதாக பிரபாகரன் அவர்கள் பாலாவிடம் கூறினார்..... கிட்டு கொழும்பை அடைந்ததும் அவரை பிரித்தானியத் தூதரகத்துக்குக் கூட்டிச் சென்றோம். பிரித்தானியத் தூதுவருடன் கலந்துரையாடிய பின் அவருக்கு பிரித்தானியாவுக்கான விசா அனுமதி அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் இலண்டன் புறப்படுமுன் கிட்டு ஒரு முக்கியமான விடயத்தைக் கவனிக்க வேண்டியிருந்தது. இந்திய அமைதிப்படைப் பாதுகாப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பின், முல்லைத்தீவுக் காடுகளுக்குச் சென்றதிலிருந்து மருத்துவ மாணவியான அவரது காதலி சிந்தியாவிடமிருந்து அவர் பிரிந்து வாழ வேண்டியதாயிற்று. சிந்தியாவுடன் மீண்டும் இணையவேண்டுமென்று அவர் தவித்தார். அவரைச் சந்திக்க யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு சிந்தியா பயணம் புரிந்தார். அங்கே திருமணம் செய்ய அவர்கள் தீர்மானித்தார்கள். சடங்கிலே கலந்துகொள்ள கிட்டுவின் தாயார் வல்வெட்டித்துறையிலிருந்து கொழும்புக்கு அவசரமாக வந்தார். சிந்தியாவின் பெற்றோர் ஏற்கெனவே கொழும்பிலிருந்தார்கள். பேச்சுவார்த்தையின் போது புலிப் பிரதிநிதிகள் தரித்திருந்த விடுதியின் அறை ஒன்றிலே, ஒக்ரோபர் மாதம் 25ம் திகதி கிட்டுவுக்கும் சிந்தியாவுக்கும் பதிவுத் திருமணம் நடைபெற்றது. சில நாள் கழித்து கிட்டு லண்டனுக்கு விமானம் மூலம் பயணமானார். பயண ஏற்பாடுகளைச் செய்துகொண்டு சிந்தியா பின்னர் லண்டனில் அவரோடு இணைந்து கொண்டார்''

**''பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா?''**

*

**யாழ். போதனா வைத்தியசாலை மீது இந்திய இராணுவம் நடாத்திய தாக்குதலின் 24வது ஆண்டு நினைவாக**

# பழி ஓரிடம் பாவம் ஓரிடம்

இந்திய அமைதிப்படை இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த காலத்தில் (1987 – 1990), அவர்களுக்கும் புலிகளுக்கும் இடையில் கடுமையான யுத்தம் நடந்தது. அந்தப் போரின்போது பல தடவைகள் இந்திய இராணுவத்தால் பொதுமக்களுக்கு பல அநீதிகள் இழைக்கப்பட்டதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் இந்த அநீதிகள் என்ன காரணத்தால் நிகழ்த்தப்பட்டன என்பதற்குச் சில பின்னணிக் காரணிகளும் உள்ளன. அதற்கு ஒரு உதாரணமாக, 1987 ஒக்ரோபர் 21ம் திகதி யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை மீது இந்திய இராணுவம் நடாத்திய தாக்குதல் சம்பவத்தைக் கூறலாம்.

இந்தத் தாக்குதலில், அங்கு கடமையிலிருந்த வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள், நோயாளிகள் என 68 பேர் அநியாயமாக உயிரிழந்தனர். அவர்களது 24வது ஆண்டு நினைவு தினம் அண்மையில் நினைவுகூரப்பட்டது. இந்த சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது? இந்திய இராணுவம் வைத்தியசாலை என்றும் பார்க்காது திட்டமிட்டு இந்தத் தாக்குதலை நடாத்தியதா? இவற்றுக்கான விடையைத் தேடினால், அப்பொழுதுதான் புலிகளின் நயவஞ்சகச் செயல்பாடுகள் தெரிய வரும்.

அந்தச் சம்பவம் நடைபெற்ற தினம், இந்திய அமைதிப்படை யாழ் முற்றவெளிப் பகுதியிலிருந்து மணிக்கூட்டுக் கோபுர வீதியால் யாழ் வைத்தியசாலைப் பக்கமாக வந்து கொண்டிருந்தது. இது ஒரு வழமையான ரோந்து நடவடிக்கை. அதேநேரத்தில் வைத்தியசாலைக்குள் பின்பக்கமுள்ள விக்ரோறியா வீதிக்கூடாகப் புகுந்த புலிகள், மணிக்கூட்டு வீதிக்கு நேராகவிருந்த வைத்தியர்களின் மேல்மாடியில் நின்றுகொண்டும், 7வது வார்டின் மேல்மாடியில் நின்றுகொண்டும் இந்திய இராணுவத்துக்கு குறிபார்க்கத் தொடங்கினர்.

நிலைமையை உடனடியாகப் புரிந்துகொண்ட வைத்தியசாலை ஊழியர்களும் நோயாளிகளும், அங்கிருந்துகொண்டு இந்திய இராணுவத்தைத் தாக்க வேண்டாம் என புலிகளிடம் மன்றாடினர். ஆனால் புலிகள் அவர்களது சொல்லைக் கேட்கவில்லை. அங்கிருந்தபடியே இந்திய இராணுவம் மீது தாக்குதல் நடாத்திவிட்டுத் தப்பியோடிவிட்டனர். இதில் புலிகளுக்கு குறிப்பிடும்படி சேதம் ஏதும் ஏற்படவில்லை. ஆனால் இந்திய இராணுவம் தம்மீது தாக்குதல் நடாத்தப்பட்ட திசையை நோக்கி எறிகணை வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூடு நடாத்தியதில் 68 பேர் அநியாயமாகத் துடிதுடித்து மாண்டனர்.

புலிகள் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்களை, வலிந்து வரவழைப்பது இதுதான் முதற்தடவையல்ல. இலங்கை – இந்திய இராணுவங்களுடன் அவர்கள் நடாத்திய 'வீரப் போராட்டங்களின்' வரலாறு முழுவதும் இத்தகையதுதான். நவாலி கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் இலங்கை விமானப்படை நடாத்திய தாக்குதல், நாகர்கோவில் பாடசாலைக்கு அருகில் திலீபன் நினைவு தின நேரத்தில் இலங்கை விமானப்படை நடாத்திய தாக்குதல் என எல்லாமே, புலிகளின் இந்தக் கீழ்த்தரமான தந்திரோபாயத்தின் விளைவாக நடந்தவையே.

(இந்தக் குறிப்பை எழுதியவர், புலிகள் யாழ்.வைத்தியசாலையிலிருந்து இந்திய இராணுவத்தின் மீது தாக்குதல் நடாத்திய போது, அங்குள்ள 7வது வார்டில் தனது தகப்பனாரை சத்திர சிகிச்சையின் நிமித்தம் வைத்திருந்து உயிர் தப்பிய ஒருவராவார்.)

*

## ஃபிடல் கஸ்ட்ரோவின் எச்சரிக்கை!

“இன்றைய சமூகத்தில் அரசியல் வளர்ச்சி குறைவாகவும், தொழில் நுட்பவியலின் முன்னேற்றம் எல்லையில்லாமலும் இருக்கின்றது. இவை இரண்டும் இணைகின்ற பொழுது பேராபத்து ஏற்படுகின்றது. மனித சமூகத்தை இன்று பேராபத்து மிரட்டுகின்றது. இப்படிப்பட்ட நெருக்கடியான நிலை மனித சமூகத்துக்கு இதுவரை ஏற்பட்டதில்லை. எந்தத் திசையில் திரும்பினாலும் மனித குலத்தை அழிக்கின்ற போர்கள், பருவ நிலை மாற்றம், பசி, தாகம், வறுமை ஆகியவற்றைப் பார்க்கின்றோம்”

- கியூபத் தலைவர் ஃபிடல் கஸ்ட்ரோ 2007ல் கூறியது

## புல்லாங்குழல்

நான் யாரால் சிரித்தாலும்
அழுதாலும் இன்னிசைதான்...
ஏனெனில்
அவள் துளையிட்ட
நாணல் அல்லவா நான்..........!

– கவிப்பிரியன்

# வடபுலத்து இடதுசாரி இயக்க முன்னோடிகள் பற்றிய புதிய நூல் வெளியீடு

இலங்கையின் வடபுலத்தில் இடதுசாரி இயக்கத்தை 20ம் நூற்றாண்டின் மூன்றாவது நான்காவது தசாப்தங்களில் ஆரம்பித்து வைத்த, 12 முன்னோடிகள் பற்றி வெவ்வேறு எழுத்தாளர்களால் எழுதப்பட்ட புதிய நூல் ஒன்றை, இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் வெளியிடவுள்ளது. அதன் வெளியீட்டு விழா 2011 நவம்பர் மாதம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வெள்ளவத்தை, 58 தர்மராம வீதியிலுள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை பேராசிரியர் சி.தில்லைநாதன் நிகழ்த்தவுள்ளார். இந்த நிகழ்வில் கலாநிதி செல்வி திருச்சந்திரன் அவர்கள், 'அக்டோபர் புரட்சியும் பெண்களும்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார். முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தின் இணைப்பாளரும் மூத்த முற்போக்கு எழுத்தாளருமான நீர்வை பொன்னையன் தலைமையிலான குழுவினர் இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இந்த நூலை இலங்கையில் பெறவிரும்புவோர் பூபாலசிங்கம் புத்தகசாலையில் (கொழும்பு – யாழ்ப்பாணம்) பெற்றுக் கொள்ளலாம். புலம்பெயர் நாடுகளில் உள்ளோர் தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

kailashpath@yahoo.com

# கடாபி சொந்த மண்ணில் மரணமெய்தினார்!

அரபு உலகின் முடிசூடா மன்னனாகவும், கூட்டுச்சேரா இயக்கத்தின் அசைக்க முடியாத தூணாகவும், லிபிய மக்களின் தேசிய உணர்வின் பிரதிபிம்பமாகவும் திகழ்ந்து, 42 ஆண்டுகள் செழிப்பான எண்ணெய் வளமிக்க லிபியாவை ஆட்சி செய்து வந்த கேணல் மும்மது கடாபி, அவரது சொந்த இடமான சேற்றி என்ற இடத்தில், லிபிய கிளர்ச்சிப் படைகள் நேட்டோ விமானப்படையின் உதவியுடன் நடாத்திய தாக்குதலில் சிறைபிடிக்கப்பட்டு பின்னர் கொல்லப்பட்டுள்ளார் என்பதை, உலகின் பெரும்பாலான ஊடகங்கள் கவலையுடன் தெரிவித்துள்ளன.

*

15ம் பக்கத்தொடர்ச்சி...

தேர்தல் ஸ்ரண்டா என்பதைத் தெளிவாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனெனில் இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்படவிருக்கும் காணிப்பதிவுத் திட்டத்தை தமிழர்களுக்கு மட்டும் எதிரான, அதுவும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு எதிரான ஒரு விடயமாக தமிழ்க் கட்சிகள் ஒரு புரளியைக் கிளப்பி, புலம்பெயர் தமிழர்களின் வயிற்றில் புளியைக் கரைத்து வருவது எல்லோரும் அறிந்த விடயம்.

எனவே அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டுள்ள பிரச்சாரங்கள் குறித்து கவனம் செலுத்தி, உண்மை நிலைமைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அவசியம். மறுபக்கத்தில், காணிக் கொள்கை சம்பந்தமாக அரசாங்கம் தனது கொள்கையைப் பகிரங்கமான முன்வைப்பதும் அவசியம். குறிப்பாக மாகாணசபைகளுக்கு உள்ள காணி அதிகாரத்தை உயிருள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் உடனும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதைவிடுத்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க போன்ற இனவாதிகள் கண்டதையும் உளற விட்டுவிட்டு, அரசாங்கம் தள்ளி நின்று வேடிக்கை பார்ப்பது, அரசாங்கத்தின் மீது தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் அவநம்பிக்கையை வளர்க்கவே உதவும். அரசாங்கம் இந்த மாதிரியான விடயங்களில் தெளிவாகவும், உறுதியாகவும் செயற்படத் தவறினால், கெட்ட சந்தர்ப்பங்களை எதிர்பார்த்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற பிற்போக்கு சக்திகள், அதைப் பயன்படுத்தி மீண்டும் இலங்கையில் இனவாத வன்முறை அரசியலைத் தூண்டிவிடும் வாய்ப்பு ஏற்படும் என்பதை அரசாங்கம் பாரதூரமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் கைகளில்தான் எல்லாமே தங்கியிருக்கிறது.

*

## தண்ணீருக்காக யுத்தம்!

இன்னும் 18 ஆண்டுகளில் சுமார் 2 பில்லியன் (200 கோடி) மக்கள் தண்ணீரைப் பார்க்காத நாடுகளில் வசிப்பார்கள். உலக மக்கள் தொகையில் மூன்றிலிரண்டு பகுதியினர் வசிக்கின்ற நாடுகளில், தண்ணீர் நெருக்கடி காரணமாக மாபெரும் சமூக – பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படும். 'நீலத் தங்கம்' – அதாவது தண்ணீருக்காக நாடுகள் போர் செய்யும்.

- Telem செய்தி நிறுவனம்

முன்பக்கத்தொடர்ச்சி...

சிங்களக் குடியேற்றமென்பது, இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்த டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே அந்த வகையான குடியேற்ற முயற்சிகளை ஆரம்பித்து வைத்தது. அந்த இனவாத பிற்போக்கு ஐ.தே.கவுடனேயே தமிழ்த் தலைமைகள் அன்றிலிருந்து இன்றுவரை வெளிப்படையாகவும், இரகசியமாகவும் கைகோர்த்து செயல்பட்டு வருகின்றன.

இங்கு நாங்கள் சிங்கள மக்கள் தாங்களாக விரும்பி தமிழ்ப் பகுதிகளில் குடியேறி வாழ்வதையோ, அதேபோல தமிழ் மக்கள் சிங்கள மக்களின் பகுதிகளில் வாழ்வதையோ திட்டமிட்ட குடியேற்றங்கள் என்று குறிப்பிடவில்லை. அப்படி வாழ்வது இன சௌஜன்யத்துக்கு நல்லதும்கூட. அப்படியில்லாமல் திட்டமிட்ட முறையில், அதுவும் அரச அனுசரணையுடன் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரதேசங்களில் குடியேற்றங்களை மேற்கொண்டு, குறிப்பிட்ட ஓர் இனத்தின் தனித்துவத்தை அழிப்பதோ அல்லது அந்தப் பகுதியின் இன விகிதாசாரத்தை மாற்றியமைப்பதோ எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சனையின் ஆணிவேராக ஆரம்பத்திலிருந்தே நிலப்பிரச்சினை இருந்தும், தமிழ் கட்சிகள் அதைப் புரிந்து கொள்ளாது அல்லது இருட்டடிப்புச் செய்து, சுலபமாக இன வெறியையும் மொழி வெறியையும் மக்கள் மத்தியில் கிளறி, அதன் மூலம் பாராளுமன்ற ஆசனங்களை வென்றெடுப்பதிலும், அதனால் கிடைக்கும் சுகபோகங்களை அனுபவிப்பதிலுமே கண்ணாய் இருந்தனர்.

இன்றும்கூட தமிழர்களின் நிலத்தை அரசாங்கம் அபகரித்து சிங்களவர்களுக்கு வழங்குகின்றது எனக் கூச்சல் போடுகின்றனரேயொழிய, அது எங்கு நடக்கின்றது, என்ன வகையாக நடைபெறுகின்றது, அது சம்பந்தமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து பேசினார்களா என்ற விபரம் எதுவும் கிடையாது. கேட்டால் இந்தியாவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம், அமெரிக்காவுக்கு அறிவித்துள்ளோம், நீதிமன்றத்தில் வழக்குப் போடப் போகிறோம் என, வாய்ச்சவடால் மட்டும் அடித்துக் கொள்வார்கள்.

1950களில் அரசாங்கம் நாடு முழுவதும் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி நிலமற்ற மக்களுக்குக் காணிகளை வழங்கிய போது, தமிழ் பகுதிகளில் அதைச் சரியாகப் பயன்படுத்தும்படி எந்தவொரு தமிழ்க் கட்சியும் மக்களுக்கு அறிவுறுத்தவில்லை. குடியேற்றத் திட்டங்கள் நிறைந்த கிளிநொச்சியை தனி மாவட்டமாக்கி, அங்குள்ள மக்களுக்கென தனியான நிர்வாகக் காரியாலயங்களை அங்கு அமைக்கும்படி, அப்பொழுது கிளிநொச்சி பட்டினசபைத் தலைவராக இருந்த வீ.ஆனந்தசங்கரியும், கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாயிகள் இயக்கமும் தொடர்ச்சியாக வலியுறுத்திய போது, கிளிநொச்சியைத் தனி மாவட்டமாக்கினால், அங்கு சிங்களக் குடியேற்றம் வந்துவிடும் என தமிழரசுக்கட்சி பூச்சாண்டி காட்டி அதை எதிர்த்தது.

அதுமட்டுமல்லாமல, இன்றும்கூட எந்தவொரு அவசியமான வேலையைத் தமிழ்ப் பகுதிகளில் அரசாங்கமோ அல்லது உள்ளூராட்சி சபைகளோ மேற்கொண்டால் அதை இனவாதம் பேசிக்கொண்டு எதிர்ப்பது பிற்போக்கு தமிழ்த் தலைமைகளின் வழக்கமாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி மற்றும் விடயங்களைத் திட்டமிடுவதற்காக குடிசன மதிப்பு எடுத்தால், அது தமிழர்களின் சனத்தொகையைக் குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை எனக் கூச்சல் போட்டு எதிர்ப்பார்கள். வீதிகளை அகலமாக்குவதற்காக தெருவோரங்களில் உள்ள சில கட்டிடங்களை அகற்ற வேண்டி ஏற்பட்டால், தமிழர்களின் சொத்துகளை அரசாங்கம் அழிக்கிறது எனக் கத்துவார்கள். நல்லூரிலிருந்த சங்கிலியன் சிலை புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்ட போது, தமிழர்களின் வீர மன்னனின் சிலையை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் 'துரோகி' அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடைக்கிறார் எனப் பொயப் பிரச்சாரம் செய்தார்கள்.

அண்மையில்கூட, யாழ் கச்சேரியடியில் உள்ள பழைய பூங்காவின் இற்றுப்போன சுவர்களை அகற்றிவிட்டு, புதிதாக வேலி போட முயன்ற போது, தமிழர்களின் பாரம்பரிய சின்னத்தை சிங்கள அரசாங்கம் இடிக்கிறது என்று மூச்சுப்பிடித்துப் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் புலிகளின் காலத்தில், பழமைவாய்ந்த யாழ் கோட்டைச் சுவர்களை அவர்கள் இடித்துக்கொண்டு போய், அதை சுட்டு நீறாக்கி சீமெந்துக்குப் பதிலாக விற்றுப் பணமாக்கிய போது, அது விடுதலைப் போராட்டத்துக்கு அவசியம் என்று வாளாவிருந்தார்களோ அல்லது 'மாமியார் உடைத்தால் பொன்குடம், மருமகள் உடைத்தால் மண்குடம்' என்ற கணக்கில் இருந்தார்களோ தெரியவில்லை.

அந்த வகையில் பார்க்கையில் தமிழர்களின் காணிகள் பறிபோகிறது என்ற தமிழ்க் கூட்டமைப்பின் கூச்சலும் உண்மையா அல்லது

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# ‘கனடியப் பிரதமர் அவ்வாறு கூறவில்லை’

இலங்கை அரசாங்கம் புலிகளுடனான இறுதியுத்த காலத்தில் போர்க் குற்றங்களை இழைத்துள்ளதால், 2013ம் ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கனடியப் பிரதமர் ஸ்ரீபன் காபர் கலந்து கொள்ளப்போவதில்லை எனத் தெரிவித்ததாக, அண்மையில் சில ஊடகங்கள் (கூடுதலாக புலிசார்பு ஊடகங்கள்) பரபரப்பான செய்தியொன்றை வெளியிட்டிருந்தன. ஆனால் அது தவறான செய்தி என இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் புரூஸ் லெவி தெளிவுபடுத்தியுள்ளார்.

கனடிய உயர் ஸ்தானிகர் அதுபற்றித் தெரிவிக்கையில், ‘இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டைப் பகிஸ்கரிக்கப் போவதாக கனடியப் பிரதமர் குறிப்பிடவில்லை. யுத்தத்தின் இறுதி மாதங்களில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படும் சில சம்பவங்கள் தொடர்பான விடயங்கள் மற்றும் அரசியல் நல்லிணக்க முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படாவிடின், இந்த மாநாட்டில் கலந்து கொள்வது கடினமானதென்றே கனடியப் பிரதமர் கூறினார். இந்த மாநாடு இலங்கையில் நடைபெறுவதற்கு இன்னமும் இரண்டு வருடங்கள் உள்ளன’ எனக் குறிப்பிட்டார்.

மேலும் கனடிய உயர் ஸ்தானிகர் குறிப்பிடுகையில், ‘அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில், மேற்படி விடயங்கள் குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் கனடியப் பிரதமர் கலந்துரையாடுவதற்குச் சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது’ எனவும் தெரிவித்துள்ளார்.

தகவல்: தினக்குரல் (ஒக் 12, 2011) *

# புலிகளை அழித்தமைக்காக அமெரிக்க குழுவினர் இலங்கைக்குப் பாராட்டு!

இலங்கைக்கு அண்மையில் விஜயம் ஒன்றை மேற்கொண்ட அல்பேர்ட் பெஞ்சமின் தலைமையிலான அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களின் தூதுக்குழு, அக்டோபர் 21, 2011 அன்று கொழும்பில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்து உரையாடியது.

அந்தச் சந்திப்பின் போது, உலகின் மிகவும் மோசமான பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளை அரசாங்கம் தோற்கடித்ததிற்காக, இலங்கையையும் அதன் தலைவர்களையும் சர்வதேச சமூகம் முன்னெப்போதையையும் விட வெகுவாகப் பாராட்டுவதாக காங்கிரஸ் உறுப்பினர்கள் குறிப்பிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் போர்க்குற்றங்கள் சம்பந்தமாக இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் விசனத்துக்குரியன என, அத்தூதுக்குழு குறிப்பிட்டதாகவும் தெரிய வருகிறது.

இந்தச் சந்திப்பின் போது, போருக்குப் பிந்திய இலங்கையில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை அமெரிக்கக் குழுவினருக்கு எடுத்துரைத்த ஜனாதிபதி ராஜபக்ச, இலங்கையின் உண்மையான பிம்பத்தை உலகிற்கு எடுத்துக் கூறுமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை தனியாகச் சந்தித்த அமெரிக்கக் குழுவினர், பாதுகாப்பு நிலவரங்கள் சம்பந்தமாகவும், புலிகளின் சர்வதேசச் செயல்பாடுகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

*

முதலாளிகள் தங்கள் பணபலத்தை வைத்துக்கொண்டு லஞ்சம் கொடுத்து தொழிலாளர்களை வளைத்துக்கொள்கின்றனர். அதனால் போர்க்குணம் மங்கிபோயிருக்கிறது. வர்க்க உணர்வு தொலைந்துபோயிருக்கிறது. புரட்சிகர மாற்றம் தேவையில்லை, ‘சீர்திருத்தங்களே’ போதும் என்று தொழிலாளி வர்க்கம் நினைக்கிறது. அப்படிப்பட்ட கருத்துக்களையே அவர்கள் ஆதரிக்கிறார்கள். சீர்திருத்தம் வாயிலாகவே உடனடி லாபம் பெறமுடியும் என்று அவர்கள் நம்ப ஆரம்பித்துவிட்டார்கள். சுருக்கமாகச் சொல்வதானால்,‘ஆங்கிலேய பாட்டாளி வர்க்கம் பூர்ஷ்வா வர்க்கமாக மாறிக்கொண்டிருக்கிறது.’ இந்தப் போக்கு வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்படியே தொடர்ந்தால் பூர்ஷ்வா வர்க்கமும் அதற்கு ஆதரவான பூர்ஷ்வா தொழிலாளர் வர்க்கமும் உருவாகிவிடும்.

**—மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தில் எங்கெல்ஸ்.**